தந்தி

இல: 1079 1970 ஜூலை 12 ஞாயிற்றுக்கிழமை ★ விலை சதம் 5

University of Jaffna Sri Lanka
Library

# கட்டாய ஓய்வின் பின்

# வேறிடத்தில் வேலையா?

## இனிமேல் அது முடியாது!

**55 வயதில் கட்டாய ஓய்வில் செல்லும் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் வேறு தனியார் நிறுவனங்களில் வேலை பெறுவது இனி முடியாமல் போகலாம். இதற்கு ஏற்றவாறு தொழில் சட்டத்தை திருத்தி அமைக்க அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.**

வாலிபர்கள் மத்தியில் வேலை இல்லாப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காகவே தற்போதுள்ள அரசாங்க ஊழியர்கள் 55 வயதில் கட்டாய ஓய்வுபெற வேண்டும் என்ற திட்டத்தை அரசாங் கொண்டு வந்தது தெரிந்ததே.

தற்போது தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்களில் பெரும்பான்மையினர் பழைய அரசாங்க ஊழியர்கள் தான் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இளைப்பாறிய அரசாங்க ஊழியர்கள் தனியார் ஸ்தாபனங்ளில் தொடர்ந்தும் வேலை செய்வார் களேயானல் இளைஞர்கள் மத்தியில் உள்ள வேலை இல்லாப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவே முடியாது என தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஆனல் தனியார் நிறுவனங்களில் வேலை வழங்கப்படும்போது, அனுபவஸ்தர்களுக்கே முதலிடம் தரப்படுகிறது. புதியவர்களுக்கு வேலை கொடுக்க அவர்கள் விரும்புவதில்லை.

தனியார் நிறுவனங்களிலும் 55 வயதினர் கட்டாய ஓய்வில் செல்ல வேண்டும் என்று சட்டம் கொண்டு வருவதை அரசாங்கத் தரப்பினர் ஆதரிக்கின்றனர். (ம)

## ரோஜர்ஸ்

லண்டன், ஜூலை 11

அமெரிக்க ராஜாங்க காரிய தரிசி லண்டன் வந்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களுடன் பல விஷயங்கள் பற்றி இவர் பேச்சு வார்த்தை நடத்துவார்.

## பீடி இலை இறக்குமதியில் நடக்கும் மோசடி ஒழியும்

பீடி இலை இறக்குமதி சம்பந்தமான மோசடிகள் பற்றி நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா தற்போது விசாரணை நடத்தி வருகிறார்.

1968-ம் ஆண்டில் 80 லட்சம் ரூத்தல் பீடி இலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு 84,50.000 ரூபா செலவாகியுள்ளதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. எனினும் அமைச்சருக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி 20 லட்சம் ரூபா பெறுமதியான பீடி இலைகளே இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவாம்.

மேற்படி விடயத்தை ஐக்கிய பீடி தொழிலாளர் சங்கம் நிதி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தது. இதை அடுத்தே இந்த மோசடி சம்பந்தமாக அமைச்சர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (5)



## தோல் பெல்ட்டில் ஆடை!

இந்தக் கன்னியின் அழகு மேனியின் முக்கிய அங்கங்களை மறைத்திருப்பது வெறும் தோல் பெல்ட்டுகள் தான்! இன்று மேல் நாட்டில் நவீன நீச்சல் உடையாக இது கருதப்படுகிறது. (ம)

## 15-ந் திகதி இறுதி நாள்

கொழும்பு, ஜூலை 12

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு தோற்ற விரும்பும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்துவிட வேண்டும்.

பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் விண்ணப்பங்கள் 30-ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## ஜெர்மனியில் கருணாநிதி பேச்சுவார்த்தை

பொன், ஜூலை 11

மேற்கு ஜெர்மன் பொருளாதார அமைச்சர் ஏர்ஹட்டை தமிழக முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று சந்தித்துப் பேசினர்.

தமிழ் நாடு உருக்காலைத் திட்டம் பற்றியும், அதற்கு உதவி பெறுவது பற்றியும் அமைச்சர் கருணாநிதி அவருடன் சம்பாஷித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அமைச்சர் கருணாநிதி பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசினர்.

## மீனாட்சி



என்னுங்க, பெரிய பெரிய பிசினஸ்காரர் எல்லாரும் விறுவிறென்று ஓடிப் போய் அதிக வரி கட்டுகின்றார்களாமே!

ஆமாங்க, வருமான வரிக்காரர் வீட்டுக்கு வந்து இரும்புப் பெட்டியைத் திறந்து உள்ளதெல்லாவற்றையும் கொண்டு போய் விடுவார்களோ என்றுதான்!

## வீடமைப்புக் கமிஷனரிடம் ஆட்சேபனை தெரிவிப்பர்

கொழும்பு மாநாகரசபையின் வரி மதிப்பீட்டு அறிவிப்புகள் தமக்கு வழங்கப்பட்டுள்ளதை அன்டர்சன் கோல்ப் மைதான வீடமைப்புத் திட்டக் குடியிருப்பாளர்கள் ஆட்சேபித்துள்ளனர்.

மேற்படி குடியிருப்பாளர்களின் சேமலாபச் சங்கம் இது சம்பந்தமான ஆட்சேபனையை வீடமைப்புக் கமிஷனரிடம் தெரிவிக்கவுள்ளது.

இந்தச் சங்கத்தின் கூட்டம் நேற்று கொழும்பு இஸ்லாமிய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வீடமைப்புத் திணைக்களமே பிரஸ்தாப வீடுகளின் வரியைச் செலுத்த வேண்டும் என்பதை மாநகரசபைக் கமிஷனர் ஏற்றுக்கொண்ட பின்னரும் இந்த அறிவித்தல்கள் வழங்கப்பட்டது குறித்து கமிஷனருக்கு கண்டனம் தெரிவிப்பது என்று பிரஸ்தாபக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. (ம)

## நாட்டைக் காக்க $7\frac{1}{2}$ லட்சம்

கொழும்பு, ஜூலை 12

நாட்டைக் காக்கும் நிதிக்கு இதுவரை ஏழரை லட்சம் ரூபா சேர்ந்துள்ளது.

மேலும் வரிச் சலுகை சான்றிதழ் மூலம் 4 கோடி 30 லட்சம் ரூபாவையும் வருமான வரி மூலம் 1 கோடி 20 லட்சம் ரூபாவையும் அரசாங்கம் சேகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்து வழக்கு ஒன்றில் ருசிகர சம்பவம்

# மது அருந்தி வந்தால் நடுக்கம் வராதென்றார்

## சாட்சி ஒருவருக்கு ரூபா 25 அபராதம் விதிக்கப்பட்டது

கொழும்பு பிரதம நீதிபதி திரு. ஈ. எப். டீ சில்வா முன்னிலையில் நடைபெற்ற விபத்து வழக்கு ஒன்றில் மது அருந்தி விட்டு வந்த வழக்காளி தரப்புச் சாட்சி ஒருவருக்கு 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாட்சி அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு மாத காலம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

மருதானை மாளிகாவத்தை பிளேஸைச் சேர்ந்த எம். எம். முகம்மது உவைஸ் என்பவரே இந்தச் சாட்சி ஆவார்.

முகம்மது உவைஸ் சாட்சியம் அளித்துக் கொண்டிருந்த சமயம் மது அருந்தினீரா என்று அவரிடம் கேட்கப்பட்டது.

தான் மது அருந்தியதை சாட்சி ஒப்புக் கொண்டார்.

இன்று நீர் சாட்சியம் அளிக்க இருப்பது பற்றி உமக்கு முன்னரே தெரியுமா என்று கேட்கப்பட்ட போது சாட்சி அதற்கும் ஆம் என்று பதில் அளித்தார்.

சாட்சியம் அளிக்க இருப்பது பற்றி உமக்கு முன்னரே தெரிந்திருந்த போதும் ஏன் குடித்து விட்டு வந்தீர் என்று சாட்சியிடம் கேட்கப்பட்ட போது, மது அருந்தி வராவிட்டால் தனக்கு நடுங்கத் தொடங்கி விடும் என்று அவர் பதில் அளித்தார்.

இதன் பின்னர் சாட்சி குடித்திருக்கிறாரா இல்லையா என்பது பற்றி அறியும்படி நீதிமன்ற சார்ஜண்ட் திரு. எஸ். ஏ. சிறில் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

சாட்சியின் அருகில் சென்று சோதனையிட்ட பின்னர் சாட்சி குடித்திருப்பதாக சார்ஜண்ட் அறிவித்தார். (5)

## காலஞ் சென்றவர் கிரீஸ் கத்தியுடன் கலைத்து வந்தார்

"காலஞ்சென்றவரும், சந்தேக நபரும், நாங்களும் பொதுத் தேர்தலில் யூ. என். பி.க்காக வேலை செய்தோம்.

"ஆனல் தேர்தல் தினத்தில் சந்தேக நபர் சமசமாஜக் கட்சி ஆதரவாளர்களுடன் காணப்பட்டார். அதுமாத்திரம் அல்லாமல் யூ. என். பி. ஆதரவாளர்களையும் தாக்க முயன்றார். சந்தேக நபர் கட்சி மாறிவிட்டார் என்பதை அப்பொழுதுதான் முதன் முதலாக அறிந்து கொள்ள முடிந்தது."

மருதானை ஆனந்த மாவத்தையைச் சேர்ந்த எம். ஹுசேய்ன் தாஜுவின் மரணம் சம்பந்தமாக நகர மரண விசாரணை அதிகாரி திரு. ஈ. வீரக்கூன் விசாரணை நடத்திய போது ஆனந்த மாவத்தையைச் சேர்ந்த பொடி மஹாத்மயா என்பவர் சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னார்.

சாட்சியான பொடி மஹாத்மயா தொடர்ந்து கூறியதாவது:- "சம்பவ தினம் காலஞ் சென்றவர் கிரீஸ் கத்தி ஒன்றுடன் என்னைக் கலைத்துச் சென்றார். நான் சுமார் 200 யார் தூரம் ஓடிச் சென்றிருப்பேன். பின்னர், டாக்சி ஒன்றில் ஏறி வீடு சென்றேன்.

"நடந்த சம்பவம் பற்றி வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்த சமயம் காலஞ் சென்றவருடன் ஏழு அல்லது எட்டுப் பேர் வீட்டுப் பக்கம் வந்தனர். இரு பகுதியினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட சமயம் அயலவர்கள் தலையிட்டுத் தடுத்து விட்டனர். இதன் பின்னர், அவர்கள் அங்கிருந்து சென்று விட்டனர்.

"இதன் பின்னர் வீதியில் சத்தம் கேட்ட போது பார்த்தேன். வீதியில் இரு நபர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். காலஞ்சென்றவர் கத்தியால் குத்தப்பட்டார் என்பது பின்பு தெரியவந்தது."

இவ்வாறு சாட்சி கூறினார்.

மரண விசாரணை அதிகாரி கொலை என்று தீர்ப்பு அளித்து சந்தேக நபரைக் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி உத்தரவிட்டார். (5)

## நைலோன் வலை களவு போனது

காலி மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் 12,000 ரூபா பெறுமதியான நைலோன் வலை காணமற் போய் இருப்பது பற்றிப் புகார் செய்து உள்ளார்.

கரையில் இருந்து சுமார் 23 மைல் தூரத்தில், தான் வலையை விரித்து விட்டு வந்ததாகவும், ஒரு சில மணித்தியாலத்தின் பின்னர் அது காணமற் போனதாகவும் இவர் தெரிவித்துள்ளார். (5)

## பாம்பினால் தீண்டப்பட்டவர் 2 வாரங்களின் பின் மரணம்

மனுவாங்குமவில் உள்ள முடிக்குரிய காணியில் வசித்து வந்த ஆறுமுகம் மாணிக்கம் (45) என்ற நபர் பாம்புக்குப் பலியானார்.

பாம்பினால் தீண்டப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் மரணம் சம்பவித்தது.

இவரின் மரணம் சம்பந்தமாக சிலாபம் திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனப் காதர் அப்துல் லத்திப் கான் விசாரணை நடத்தினார்.

அப்பொழுது காலஞ்சென்றவரின் மனைவியான கலுகே அக்கிநோனு சாட்சியம் அளித்தார்.

அவர் கூறியதாவது:- "இரு வாரங்களுக்கு முன்னர் காலஞ் சென்றவர் பாம்பு ஒன்றினால் தீண்டப்பட்டார். கடந்த ஜூலை 3-ம் திகதி காலஞ்சென்றவரின் சகோதரி காலமான தினத்தில் கவலையை மறப்பதற்காக நன்றாக மது அருந்தினார். ஜூலை 5-ம் திகதி தனக்கு மேலில் நோவு ஏற்பட்டிருப்பதாகவும், மூச்சு விடுவதற்குக் கஷ்டமாக இருப்பதாகவும் சொன்னார். சிகிச்சை அளிப்பதற்கு முன்னர் மரணம் சம்பவித்தது."

இவ்வாறு சாட்சி சொன்னார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி பாம்பு கடித்து ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பு வழங்கினார். (5)

## 9 பேர் பலி

பம்பாய், ஜூலை 11

பஸ் ஒன்று கிணற்றுக்குள் விழுந்ததால் 9 பேர் கொல்லப்பட்டனர்.

மகாராஷ்டிரா பகுதியிலுள்ள டாவ்ரி என்ற கிராமத்தில் இந்த விபத்து நடைபெற்றுள்ளது.

## நற்பயன் கிடைக்குமாக?

அரச அலுவலகங்களில் ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்கின்றார்களா? இல்லையேல் "கன்டீன்" களிலும், தங்கள் சொந்த வேலைகளிலும் நேரத்தைக் கடத்துகின்றார்களா? இவற்றையும் இவை போன்ற வேறு பல ஊழல்களையும் கண்டறிந்து மோசப் பேர்வழிகளை வழிக்குக் கொண்டு வர எல்லா அரச அலுவலகங்களிலும் "திடீர்க் குழு" க்களை (ஃபிளையிங்ஸ்குவாட்) நியமிக்க இருப்பது மிகவும் நல்ல முயற்சி என்றே எண்ணுகிறோம். இத்தகைய குழுக்கள் முன்பு சுகாதாரப் பகுதியிலும் கல்விப் பகுதியிலும் நியமிக்கப்பட்டிருந்தன என்று இப்போதுதான் அறிகின்றோம். அந்தக் குழுக்களால் பொதுமக்களுக்கு எத்தகைய பயனும் கிடைக்கவில்லை. சுகாதாரப் பகுதித் திடீர்க் குழு முறையாக இயங்கியிருந்தால் ஆஸ்பத்திரிகளில் மருந்துத் தட்டுப்பாடு முதலிய பல்வேறு ஊழல்கள் மலிந்திருக்குமா? எனவே மக்கள் அரசால் நியமிக்கப்படும் திடீர்க் குழுக்களால் பொதுமக்களுக்கு நற்பயன் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

தந்தி

## அசிட் அருந்தி கல்லூரி மாணவி தற்கொலை!

### விஞ்ஞான ஆய்வுகூடத்தில் பரிதாப சம்பவம்

"இடைநேரத்துக்காகப் பாடசாலை மணி அடிக்கப்படுவதற்கு முன்னர் மல்காந்தி எங்களுடன் இருந்தார்.

"இடைநேரத்துக்கான மணி அடிக்கப்பட்ட பின்னர் அவர் விஞ்ஞான ஆய்வுகூடத்துக்குள் சென்று எதையோ விழுங்கினார். பின்னர் கீழே விழுந்து கிடந்து சத்தமிட்டார்."

பத்தேகம கிறைஸ்ட் சேர்ச் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 16 வயது மாணவி மல்காந்தி அபேவிக்கிரமாவின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையின் போது, அதே பாடசாலையைச் சேர்ந்த சந்தியா கொடிகார என்ற மாணவி சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

சந்தியா கொடிகார தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் மல்காந்தி என்னுடன் கதைத்துக் கொண்டிருந்தார். அவருக்கும் வேறு மாணவிகளுக்கும் இடையில் எதுவிதமான தகராறும் இருந்ததில்லை. அவர் மனவருத்தம் அடைந்திருந்தது போலவும் அப்பொழுது காணப்படவில்லை."

இவ்வாறு சாட்சி சொன்னார்.

லக்ஷ்மி ஜயலதா என்ற மாணவி சாட்சியம் அளிக்கையில் பின்வருமாறு கூறியிருந்தார்:-

"மல்காந்தியும் நானும் ஒரே வகுப்பில் படித்து வந்தோம். இடைவேளைக்கான மணி அடிக்கப்பட்ட சமயம் மல்காந்தி எங்களுடன் வகுப்பில் இருந்தார்.

"இதன் பின்னர் விஞ்ஞான ஆய்வுகூடம் இருந்த இடத்துக்கு நான் சென்ற சமயம் மல்காந்தியை ஆய்வுகூடத்துக்குள் கண்டேன். மல்காந்தி எதையோ உட்கொள்வது தெரிந்தது.

"மற்றைய மாணவிகளின் கூச்சல் சத்தம் கேட்ட போது ஆய்வுகூடத்துக்குள் ஓடிச் சென்றேன். மல்காந்தி கீழே வீழ்ந்து கிடந்தார்.

"இது சம்பந்தமாக உடனடியாக அதிபருக்கு அறிவிக்கப்பட்டது. முதலில் பத்தேகம ஆஸ்பத்திரிக்கும் பின்னர் காலி ஆஸ்பத்திரிக்கும் அவர் எடுத்துச் செல்லப்பட்டார்

"இதன் பின்னர் மல்காந்தி ஆஸ்பத்திரியில் மரணமடைந்தது தெரியவந்தது. அவர் தற்கொலை செய்வதற்கான காரணம் எதுவும் இல்லை. பாடசாலையில் எல்லோருடனும் அவர் சந்தோஷமாகவே பழகிவந்தார்."

இவ்வாறு லக்ஷ்மி ஜயலதா சாட்சியம் அளிக்கையில் கூறினார்.

மற்றும் கல்லூரி அதிபர், வைத்திய அதிகாரி ஆகியோர் சாட்சியம் அளித்த பின்னர், அசிட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (5)

## தற்கொலை

மாதம்ப பகுதியில் உள்ள அத்துவான என்ற இடத்தைச் சேர்ந்த சதாசிவம் சிவானந்தா (18) என்ற இளைஞர் நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

பாம்பு ஒன்று கடித்ததினால் இவர் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த பின்னர் நஞ்சு அருந்தினார் என்று மரண விசாரணையின் போது கூறப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி ஜனப் காதர் அப்துல் லத்திப் கான் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார். (5)


தந்தி
சிறு விளம்பரங்கள்

வசியம்

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொல.

R 67928


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்கப் போனுள்

# வெற்றுவீட்டில்வைத்து உடலுறவுகொண்டனர்?

### புதிய வைத்திய அறிக்கை கோரி நீதவான் உத்தரவு

"அழகிய இளம் பெண் ஒருத்தி மருந்து வாங்குவதற்காக ஆஸ்பத்திரிக்கு வந்தாள். அவள் வெற்று வீடொன்றுக்குள் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு கற்பழிக்கப்பட்டாள்"

மாத்தளை நீதிபதி திரு. சிவா செல்லையா முன்னிலையில் நடைபெற்ற வழக்கு ஒன்றில் முறைப்பாட்டுக்காரர் தரப்பில் மேற்கண்டவாறு கூறப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், கற்பழிக்குப்பட்டதாகக் கூறப்படும் பெண்ணின் தகப்பனுர் சாட்சியம் அளித்தார்.

வைத்திய அதிகாரியின் அறிக்கையில் தான் திருப்திப்படவில்லை என்றும், பெண்ணைத் தான் திருப்பி அழைத்துக் கொண்டு போவதற்கு இணங்க முடியாது என்றும் நீதவானிடம் கூறினுர்.

இவரின் கூற்றைத் தொடர்ந்து, மற்ருெரு புதிய வைத்திய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி நீதவான் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சம்பவம் சம்பந்தமாக ரத்தோட்டைப் பொலீஸார் சுமனே என்ற நபரைக் கைது செய்தனர். சாது என்று அழைக்கப்படும் மற்ருெரு நபரும் பொலீஸில் சரண் அடைந்துள்ளார்.

இந்த வழக்கில் வழக்காளி தரப்பில் பின்வருமாறு கூறப்பட்டது.

"பத்மசீலி ஜயவர்த்தன என்ற இளம் பெண் ரத்தோட்டையைச் சேர்ந்தவர். ஜூன் 11-ம் திகதி ரத்தோட்டை ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்குவதற்கு வந்தாள்.

"அங்கு சுமனே என்ற நபரையும் அல்விஸ் என்பவரையும் சந்தித்தாள். அவர்கள் வனராணி குடியேற்றத்திட்டத்தில் உள்ள வெற்று வீடு ஒன்றுக்கு அவளைக் கொண்டு சென்றனர்.

"வெற்று வீடு ஒன்றில் அவள் இருந்த சமயம் அல்விஸ் என்ற நபர் அங்கிருந்து மெதுவாக வெளியேறினுர். அப்பொழுது இரவு 11-00 மணி இருக்கும்.

"அல்விஸுக்குப் பதிலாக சாது என்பவர் அந்த வீட்டுக்கு வந்தார். பிந்திவந்த சாது முதலில் அவளை அணைத்து உடலுறவு கொண்டார். இதன் பின்னர் சுமனேயும் அவளுடன் சரசமாடினுர்.

"அதிகாலை நேரமாயிற்று சுமனே அவளை கட்டுகஸ்தோட்டைக்கு அழைத்துச் சென்ருர். பின்பு அங்கிருந்து ரத்தோட்டைக்கு அழைத்துச் சென்ருர்.

"அங்குள்ள லேரன்வில் குருப் கொக்கோத் தோட்டத்திலும் ஒரு இரவு வைத்திருந்தார்.

"அன்று அதிகாலை பிரஸ்தாப பெண்ணின் சகோதரன் அவளைச் கண்டு பிடித்துப் பொலீஸிடம் ஒப்படைத்தார். அதே தினம் அவள் மாத்தளை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைக்காக ஆஜர் செய்யப்பட்டார்."

இவ்வாறு வழக்காளி தரப்பில் கூறப்பட்டது.

புதிய வைத்திய அறிக்கை கிடைக்கும்வரை நீதவான் மேல் விசாரணையை ஒத்தி வைத்தார். (5)

### 20 வருட இன்ப வாழ்க்கை விவாகரத்தில் முடிந்தது!

20 வருடகாலமாகக் கணவன் - மனைவியாகி இன்ப வாழ்க்கை நடத்திய தம்பதிகள் விவாகரத்துப் பெற்றுப் பிரிந்து சென்ற சம்பவம் ஒன்று கொழும்பு நீதி மன்றத்தில் நடைபெற்றது.

இந்த விவாகரத்து வழக்கில் மனுதாரர், கோட்டே மடுவெல வீதியைச் சேர்ந்த மில்டிரட் எமாலின் வணகுரு ஆவார்.

தெமட்டகொடை பேஸ்லைன் வீதியைச் சேர்ந்த தனது கணவரான டொன் பேர்சி வணகுருவிடமிருந்து விவாகரத்துக் கோரி வழக்குத் தொடர்ந்திருந்தார்.

மனுதாரர் தனது சாட்சியத்தில் கூறியதாவது, "1950 ஆகஸ்ட் 30-ம் திகதி திருமணம் செய்தோம். திருமணம் மூலம் ஐந்து குழந்தைகள் இருக்கிருர்கள்.

"1967 ஜனவரி முதல் எங்களுக்கிடையில் தகராறு ஏற்பட ஆரம்பித்தது. எதிர் மனுதாரர் நன்ருகக் குடிக்கத் தொடங்கினுர். அவர் குடித்து விட்டுவந்து என்னைத் தாக்குவார். 1969 ஆகஸ்ட் 14-ம் திகதி அவர் வீட்டைவிட்டுச் சென்ருர் அதன்பின்னர் வீடுதிரும்பவில்லை"

இவ்வாறு சாட்சி கூறினுர்.

மனுதாரரான மில்டிரட் எமாலின் வணகுரு தனது மனுவில், தனது கணவரிடம் இருந்து விவாகரத்துக் கோரியதுடன் தனது பிள்ளைகளுக்குத் தலா 40 ரூபா வீதம் தாபரிப்புக் கோரி இருந்தார். (5)

### அதிர்ஷ்ட தேவதையை நாடி மாதா கோயில் சென்றனர்

பேரூட், ஜூலை 11

லெபனுனில் நூரிச் என்ற ஒரு கிராமம் உண்டு.

அங்குள்ள மாதா கோவில் ஒன்றுக்குச் செல்லும் பக்தர்கள் தம்முடன் சுவீப் டிக்கெட்டுகளை எடுத்துச் செல்வது வழக்கம்.

கன்னி மரியாளின் ஆசியைப் பெற்ருல் அதிர்ஷ்ட தேவதையின் அனுக்கிரகம் கிடைக்கும் என்பது இவர்களின் நம்பிக்கை.

லெபனுனின் ஏனைய நகரங்களில் உள்ளவர்கள் எல்லாம் நூரிச்சில் உள்ள அந்த மாதா கோவிலுக்கு தமது சுவீப் டிக்கெட்டுகளை எடுத்து வருவார்கள்.

இதுபற்றிய செய்தியை வெளியிட்டுள்ள "லேயோரர் என்ற லெபனுன் பத்திரிகை மாதா கோவிலுக்குச் சுவீப் டிக்கெட் கொண்டு போனவர்களில் ஒருவராவது இதுவரை பரிசு பெறவில்லை என்ற செய்தியையும் வெளியிட்டது. (5)

### கழுத்தில் சுருக்கு போட்டு சாவு

பருத்தித்துறையைச் சேர்ந்த கந்தையா வைரமுத்து (64) என்ற நபர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இவரின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. இராமநாதன், தற்கொலை என்று தீர்ப்பு அளித்தார். (5)

### காதலுக்கு பெற்ருேர் குறுக்கே நின்றனர்

### கருத்தொருமித்த சோடி நஞ்சுக்குப் பலி

"எங்களுடைய திருமணத்துக்குப் பெற்ருேர் தடையாக இருக்கிருர்கள். இதனுல் நாங்கள் இருவரும் நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொள்கிருேம்"

டி. பி. சுமணபாலாவுக்கு வயது 19. சுமணுவதிக்கு வயது 18. இருவரும் கருத்தொருமித்த காதலர்கள். இவர்களின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின் போது கண்டு எடுக்கப்பட்ட கடிதத்தில் மேற்கூறிய வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன.

பதுவலுகொடையைச் சேர்ந்த இவர்களின் மரணம் சம்பந்தமாக திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. கே. ஏ. பிரான்சிஸ் கினவின்ன விசாரணை நடத்தினுர்.

அப்பொழுது காலஞ்சென்ற சுமணபாலாவின் தந்தையாரான டி. பி. ஜோசா சாட்சியம் அளித்தார். அவர் கூறியதாவது:-

"எனது ஆறுபிள்ளைகளில் ஐவர் பெண்கள். சுமணபாலா எனது ஒரே மகன். சுமணுவதி என்ற பெண்ணை அவர் காதலித்தார்.

"கும்பெனித் தெருவில் உள்ள சலூன் ஒன்றில் சுமணபாலா வேலை செய்து வந்தார். சுமணபாலாவுக்கும் சுமணுவதிக்கும் இடையிலான நட்புப்பற்றி சம்பவம் நடைபெறுவதற்கு ஒரு மாத காலத்துக்கு முன்னர் அறிந்தேன். சுமணுவதியினுல் சுமணபாலாவுக்கு எழுதப்பட்ட சில கடிதங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

"இதன் பின்னர் சுமணபாலாவை ஒரு நாள் அழைத்து சுமணுவதியுடனுன தொடர்பைக் கைவிட்டுவிடும்படி புத்திமதி கூறினேன். வீட்டையும், காணியையும் அவருடைய பெயருக்கே (சுமணபாலா) எழுதித் தரலாம் என்றும், தற்போதைய வீடு திருத்தப்பட்டபின்னர் பொருத்தமான ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைப்பதாகவும் சொன்னேன்.

"அதே சமயம் சுமணபாலாவின் தொடர்பைத் தாயாரும் விரும்பவில்லை. தான் உயிருடன் இருக்கும் வரை அந்தப் பெண்ணை வீட்டுக்குக் கொண்டுவரக் கூடாது என்று தாயார் கூறிவிட்டார்.

"இதனுல் சுமணபாலா மனவருத்தம் அடைந்தவராகக் காணப்பட்டார். சுமணுவதியைத் தான் திருமணம் செய்யாவிட்டால் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகத் தனது நண்பர்களிடம் கூறி இருந்தார் என்று அறிந்தேன்.

"சம்பவதினத்துக்கு முதல் நாள் மாலை 7-00 மணி அளவில் கையில் கண்ணுடி தம்ளர் ஒன்றுடன் சுமணபாலா வீட்டில் இருந்து வெளியேறிச் செல்வதைக் கண்டேன்.

"அப்பொழுது நான் சந்தேகப்படவில்லை. விசாரித்துப் பார்த்த போது சுமணுவதியும் காணுமற் போனது தெரியவந்தது.

"இருவரும் கள்ளமாக ஓடிவிட்டார்கள் என்று நினைத்தேன். அடுத்த நாட்காலை இருவம் ஒருவருக்கு ஒருவர் அருகில் பிணமாகக் கிடந்தனர். கண்ணுடி தம்ளர் ஒன்றும், நஞ்சுப் போத்தல் ஒன்றும் அருகில் கிடந்தன."

இவ்வாறு சாட்சி சொன்னுர்.

சுமணுவதியின் தந்தையாரின் சாட்சியத்தையும் பதிவு செய்த பின்னர் தற்கொலை என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினுர். (5)

### அம்மணமாகசூரியஸ்நானம் செய்த போது பிடிபட்டனர்

அம்மணமாக இருந்து சூரிய ஸ்நானம் செய்து கொண்டிருந்த சமயம் பல்கலைக்கழக நிர்வாகிகளினுல் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட பதினெரு மாணவர்களுக்கு தலா 10 சிலிங் அபராதம் விதிக்குப்பட்டது.

இந்தச் சம்பவம் கீல் பல்கலைக் கழகத்தில் உள்ள விடுதி வளவில் நடைபெற்றது.

அபராதம் விதிக்கப்பட்ட பதினெரு மாணவர்களும் ஒரு வருட காலத்துக்குப் பல்கலைக்கழக விடுதியை உபயோகிப்பதற்கும் தடை விதிக்குப்பட்டனர்

கீல் பல்கலைக்கழக உபவேந்தரான பேராசிரியர் காம்பெல் ஸ்ரெவார்ட் அபராதம் விதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் "இது போன்ற சம்பவங்களை நாம் உதாசீனப்படுத்த முடியாது" என்று கூறி உள்ளார்.

பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கக் காரியதரிசி திரு. பெப்கர்றி இது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில், மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை கடுமையானது என்றும், வெளியில் உள்ளவர்களின் நிர்ப்பந்தமே இதற்குக் காரணம் என்றும் சொன்னுர். (5)


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை - கொழும்பு

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு

கொழும்பு - 11

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த சுதந்திர தினம் நாடு குடியரசாகும்?

## உத்தேச அரசியல் அமைப்பு சபை நடவடிக்கை எடுக்கும்

**1971 பெப்ரவரி நான்காம் திகதி கொண்டாடப்பட உள்ள இலங்கையின் 24-வது சுதந்திர தினத்தன்று, மக்கள் குடியரசுதினம் பிரகடனம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது-**

இலங்கைக்குப் புதிய அரசியல் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட உள்ள அரசியல் அமைப்புச் சபை இதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும்.

அரசியல் அமைப்புச் சபையின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 19-ம் திகதி நடைபெற இருப்பது தெரிந்ததே.

குடியரசு தினமாக இலங்கையைப் பிரகடனம் செய்வதற்குத் தேவையான புதிய அரசியல் திட்டம் ஒன்றை நான்கு மாத காலத்துக்குள் இந்தச் சபை தயாரித்துவிடும் என்று அரசாங்க வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை தோட்டத்தொழில், அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா, மேற்கொண்டு வருகிறார்.

இவருக்கு உதவியாக மந்திரி சபையின் உபகமிட்டி ஒன்று இயங்கிவருகிறது.

இந்த உப கமிட்டியில், திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயக்கா, பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா, ரி. பி. இலங்ரத்ன, பீட்டர் கெனமன், டாக்டர் என். எம். பெரேரா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அரசியல் அமைப்பு பற்றிய நகல் சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், உத்தேச அரசியல் அமைப்புச் சபை பற்றி ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை கூடுகிறது.

மற்றும் எதிர்க்கட்சிகளான தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக் கூட்டங்கள் எதிர்வரும் 19-ம் திகதிக்கு முன் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)

## சதி வழக்கில் சிறைத்தண்டனை

ஏதன்ஸ், ஜூலை 11

கிரேக்க அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 6 பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது-

## அரசு ஏற்கும்

கொழும்பு, ஜூலை 12

மருதானையில் உள்ள டவர் படமாளிகையை அரசாங்கம் பொறுப்பேற்கும்.

பிரஸ்தாப படமாளிகையைப் பொறுப்பேற்பதற்கான நிதி ஒன்றையும் அரசாங்கம் ஆரம்பித்து உள்ளது.

டவர் படமாளிகையை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று மிகவும் பழையு நாடக சங்கமான ஆரிய சிங்கள நாடக சபை கருத்துத் தெரிவித்திருந்தது. (ஐ)

## மூன்று கிராமங்களில் ஒரே இரவில் பல திருட்டுக்கள்

ஒரே இரவில் அடுத்தடுத்துள்ள மூன்று கிராமங்களில் களவு போன சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது-

கிரான் என்னும் இடத்தில் ஒரு வீட்டில் 19 தங்கப் பவுண் நகைகள், திருட்டுப் போயுள்ளன-

அதே இரவு அடுத்த கிராமமாகிய கோரகல்லிமடுவில் மற்றொரு வீட்டில் அலுமினியப் பாத்திரம் ஒன்றை மாத்திரம் கண்டெடுத்த திருடர், அதற்குள் இருந்த அரிசியைக் கொட்டிக் கொண்டு பாத்திரத்தை விட்டுச் சென்றுள்ளனர்-

கோரகல்லிமடுவுக்கு அணித்தாயுள்ள சந்திவெளி என்ற கிராமத்தில் அரசாங்க நெசவு நிலையத்தினுள் புகுந்த திருடர்கள் 10 ரூத்தல் நூலையும் மணிக்கூடு, தராசு போன்றவற்றையும் திருடிச் சென்றுள்ளனர்-

இது சம்பந்தமாக பொலிஸார் புலன் விசாரணை நடத்தியதன் பேரில் ஒருவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது- (5)

## புதுச்சேரி முதலமைச்சர்

சென்னை, ஜூலை 11

புதுச்சேரி முதலமைச்சர் பாருக் மரைக்காயர் வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பும் வரையில் அவரது பொறுப்புகள் அமைச்சர் ஜே. எஸ். குமாரசாமியிடம் விடப்பட்டுள்ளன.

இதுபற்றிய அரசாங்க அறிவித்தல் ஒன்று புதுச்சேரியில் வெளியிடப்பட்டு இருக்கிறது.

## பதில் கூற ரத்னசாரி தயார்

ஜாகார்த்தா, ஜூலை 11

"யுத்த சீர்திருத்த நிதி மோசடி விஷயமாக தான் நிரபராதி என்பதை தெரிவிக்க டெலிவிஷன் மூலம் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்"

முன்னாள் இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்னோவின் மனைவியான ரத்னசாரி தேவி இவ்வாறு நிருபர்களிடம் கூறினர்.

தன்னிடம் அதிகாரிகள் கேட்கும் கேள்விகளும் தான் கூறும் பதில்களும் டெலிவிஷன் மூலம் மக்களுக்கு காட்டப்பட வேண்டுமென ரத்னசாரிதேவி கோரினார்

## மாவைக் கந்தன் ஆலயம் இருள் மண்டிக்கிடக்கிறது

தினமும் ஆறு காலப் பூசை நடைபெற்று வந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் இப்போது இருள் மயமாக இருக்கிறது- இரவு நேரத்தில் வெளிச்சம் என்பது மருந்துக்கும் இல்லாமல் இருள் கௌவிக் கிடக்கிறது-

ஆலயம் இரவில் இருளில் மூழ்கி இருப்பது குறித்து பரிபாலகர்களிடம் கேட்டபோது, "ஆலயத்தின் உட்பிரகாரத்தில்தான் மின்னிணைப்பு பொத்தான்கள் உள்ளன- உட்பிரகாரக் கதவு பூட்டப்பட்டிருப்பதால் அங்கு சென்று வெளிச்சம் ஏற்ற முடியவில்லை" என்று தெரிவித்தனர்-

ஆலயத்தின் உள் வீதிக்குச் செல்லும் கதவு கடந்த 7-ந் திகதி முதல் திறந்து கிடக்கிறது- பொலீஸார் தொடர்ந்து அங்கு காவல் புரிகின்றனர்- ஆனல் ஆயுதம் தாங்கிய பொலீஸார் வாபஸ் பெறப்பட்டு உள்ளனர்-

8-ந் திகதி முதல் சிறுபான்மைத் தமிழர்கள் சிறுசிறு தொகையினராக உள் வீதியில் நின்று சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்- 8-ம் திகதியன்று பூட்டப்பட்ட கடைகள் இன்று திறந்திருந்தன-

மாவிட்டபுரத்தில் பொலீஸார் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு- ஸ்டான்லி சேனநாயகா உத்தரவிட்டுள்ளார்-

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் திருவிழா நிறுத்தி வைக்கப்பட்டபோதும், சிறுபான்மைத் தமிழ் மக்கள் ஆலயப் பிரவேச முயற்சிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டுள்ளார்கள் என்பது தெரிந்ததே-

இதை அடுத்து, இப்பகுதியில் அமைதிக்கும் சமாதானத்திற்கும் பங்கம் வராமல் பாதுகாக்க தற்காலிக பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டு, பொலீஸார் அப்பிரதேசத்தைக் கண்காணித்து வருகின்றனர்-

அதற்கிடையில், காலணிகளுடன் பொலீஸார் கோவிலுக்குள் சென்று, கோவிலின் புனிதத் தன்மைக்குப் பங்கம் விளைவித்துள்ளார்கள் என்று மாவை ஆலயப் பிரதம குருக்களின் பிரதிநிதியான திரு- சி- சுந்தரலிங்கம் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு முறைப்பாடு செய்துள்ளார்-

"மாவை ஆலயத்தின் புனிதத் தன்மை அண்மைக் காலத்தில் கெடுக்கப்பட்டுள்ளது- எனவே புண்ணிய ஸ்நானம் செய்ய வேண்டும்- ஆகையால் பொலீஸாரை அப்புறப்படுத்துங்கள்" என்றும் திரு- சி- சுந்தரலிங்கம் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைக் கேட்டுள்ளார்-

அதே வேளையில், கோவிலின் புனிதத் தன்மையைப் பாதிக்கும் வகையில் பொலீஸார் நடக்கவில்லை என்று வட பகுதி பொலீஸ் சுப்பிரிண்டன்டன் திரு- ஆர்- சுந்தரலிங்கம் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு உறுதி அளித்துள்ளார்- (5)

## பந்தல் சரிந்து ஐவர் மரணம்

சென்னை, ஜூலை 11

இந்து கோயில் ஒன்றின் முன் கட்டப்பட்டிருந்த பந்தல் சரிந்து விழுந்ததால் 5 பேர் கொல்லப்பட்டனர்.

பாண்டிச்சேரிப் பகுதியுள்ள கிராமமொன்றில் இன்று இச்சம்பவம் நிகழ்ந்தது.

## டி. ஆர். பி. காரர்களால் அரசாங்கத்துக்கு தலையிடி

இலங்கையில் உள்ள டி- ஆர்- பி- காரர்களினல் பெருந்தொகையான அந்நிய செலாவணி விரயம் செய்யப்படுவதாகக் கூறப்படுவது பற்றி நிதி அமைச்சர் டாக்டர் என்- எம்- பெரேரா ஆராய்ந்து வருகிருர்-

ஒவ்வொரு மாதமும் சுமார் 25 லட்சம் ரூபா இந்தியாவுக்கு இவர்களால் அனுப்பப்படுவதாக மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன-

தற்பொழுது இலங்கையில் 25,000க்கு மேற்பட்ட டி- ஆர்- பி- காரர்கள் உள்ளனர் என்று கூறப்படுகிறது-

இவர்களில் பெரும்பாலானவர்கள் தனியார் துறையில் தொழில் பார்ப்பதாகவும் மற்றும் சிலர் இலங்கை போக்குவரத்துச் சபை, அரசாங்க ஆஸ்பத்திரிகள், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஆகியவற்றிலும் கடமை பார்ப்பதாகவும் கூறப்படுகிறது-

சில டி- ஆர்- பி-காரர்களின் விஸா 1947-ம் ஆண்டு முதல் நீடிக்கப்பட்டு வருவதாகவும், இதற்குப் பின்னணியில் சில பெரும் புள்ளிகளின் தலையீடு இருந்து வந்திருப்பதாகவும் அரசாங்கம் கருதுகிறது- (5)


வாழ்க்கையில் பிரச்சினையா?

கவலை வேண்டாம்...

உங்கள் பிரச்சினை எதுவானலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ, கடையிலோ

ஸ்ரீ ராம வாசனைப் புகையை

தவருது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3–25

மூன்று மாத பாவனைக்கு ரூ. 7–50

வி- பி- பி- ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவருத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்ரேரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற

மகா மாந்திரீகர்

நீலன் கந்தசாமி,

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.


இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 12 ஜூலை 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org